**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.**

முன்னிலை: **திரு.S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

**2022 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 12–ஆம் நாள் திங்கள்கிழமை**
**அசல் வழக்கு எண் – 214/2015**
**CNR No: TNAL050002832015**

தங்கதுரை – வாதி

/எதிர்/

கருணாகரன் – பிரதிவாதி

தாவா சொத்தைப் பொறுத்து வாதிக்கு உரிமை விளம்புகை செய்தும், அதன் தொடர்பரிகாரமாக தாவா சொத்தில், பிரதிவாதியோ, அவரது ஆட்களோ, ஏஜெண்டுகளோ பிரவேசிக்காமலும், வாதியின் அமைதியான அனுபவத்தில் தலையீடு செய்யாமலும் இருக்க நிரந்தர உறுத்துக்கட்டளை வழங்கியும், தாவா செலவுத்தொகை வாதிக்கு, பிரதிவாதியிடமிருந்து கிடைக்க உத்தரவிட்டும், இவ்வழக்கின் தன்மைக்கேற்றபடி இந்நீதிமன்றத்திற்கு யுக்தமாகத் தோன்றுகின்ற இதர பரிகாரங்களையும் வாதிக்கு வழங்கி நீதி செலுத்த பிரார்த்திக்கப்படுகிறது.

இவ்வழக்கானது 12.12.2022–அன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்ததில், வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.பிரான்சிஸ் சேவியர் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.ஜேசுராஜ் அவர்கள் முன்னிலையாகியும், வழக்கு கோப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

## தீர்ப்புரை

வாதி அழைத்தும் ஆஜரில்லை. வாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி, இவ்வழக்கை தள்ளுபடி செய்வதில் தனக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை என தெரிவிக்கின்றார். எனவே இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2022 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 12–ஆம் நாள் இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

**<u>வாதி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>**

–இல்லை–

**<u>பிரதிவாதி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>**:

–இல்லை–

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

(ஒப்பம்)திரு.S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.